O.S. No.12/2023

23.07.2025

வா.சா.1

**திரு மோகன்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கியது தொடர்பாக நாங்கள் பட்டா ரத்து செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுத்தோமா என்றால் இல்லை. 1-ம் பிரதிவாதி தனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்தது தொடர்பாக வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்திருந்தார், அந்த மனுவில் நாங்கள் யாரும் தரப்பினர் கிடையாது. எங்களை மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ளார்கள். எங்களை அழைத்து விசாரணை செய்யவில்லை. அதனால் நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். மேற்படி விபரத்தை என்னுடைய வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. சாட்சி தானாக வழக்குரையில் தெரிவித்திருப்பதாக

கூறுகிறார். வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. 1-ம் பிரதிவாதியின் தாயார் இறந்தபிறகு உயிலாவணத்தின் அடிப்படையில் வருவாய் துறையில் பட்டா பெயர் மாற்றம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.17 முதல் வா.சா.ஆ.21 குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. 1-ம் பிரதிவாதியின் தாயார் என் தகப்பனார் சத்தியநாராயணனுக்கு பொது அதிகாரம் எழுதியது தொடர்பாக நான் எதுவும் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.17, வா.சா.ஆ.18 யை வழக்கிற்கு பின்னிட்டு படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. உயில் ஆவணத்தை ஒத்து பொது அதிகார ஆவணம் எழுதப்பட்தாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரம் என் தகப்பனாரை கேட்டு தெரிந்து கொண்டேன். எதிர் வழக்குரையில் கண்டுள்ள வழக்கு விபரங்கள் மற்றும் பொது அதிகாரம் வழங்கப்பட்டது, ரத்து செய்யப்பட்டது போன்ற விபரங்கள் என் தகப்பனாரை விசாரித்தால் தெரியும் என்றால் சரி. வா.சா.ஆ.17 ல் வெங்கலெட்சுமி அம்மாள் எழுதி வைத்த உயிலின்படி 1-ம் பிரதிவாதியின் தாயாருக்கு மாறங்குடி வட்டம், தாமரப்பள்ளம் கிராமத்தில் விவசாய நிலங்களும் மனைக்கட்டும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 1-ம் பிரதிவாதிக்கு சொந்தமான

சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வெங்கலெட்சுமி அம்மாள் அவர்களால் எழுதப்பட்ட உண்மையான உயில் ஆவணம் மறைக்கப்பட்டு என் தகப்பனாரால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள்தான் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.6 என்றால் தவறு. வா.சா.ஆ.2 ல் 2 வது பக்கத்தில் வ.எண் 8 ல் 183/1 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.6 ன் 3 வது பக்கத்தில் புல எண் 183/1 என்பது 4 உட்பிரிவுகளாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.6 ல் புல எண் 183/1A, 183/1Q, 183/1N, 183/1G என குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் பழைய புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. புல எண் 183/1 என்பது எந்த வருடம் உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.6 ஆவணங்களில் கண்டுள்ள வருடங்கள் 4 ஆண்டுகள் வித்தியாசம் உள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.6 உட்பிரிவு கண்டுள்ள புல எண்கள் UDR க்கு பின்னிட்டு பிரிக்கப்பட்டுள்ளது. UDR ல் பிரிக்கப்பட்ட புல எண்களை கண்டு வா.சா.ஆ.6 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. உட்பிரிவுகள் செய்யப்பட்டது தொடர்பாக என்னுடைய வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரி.

ஆவணம் பற்றிய விபரம் எப்போது தெரியவந்தது என்பது குறித்து என்னுடைய வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.15 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் தவறு. வழக்கு சொத்துக்கள் முழுவதும் 1-ம் பிரதிவாதிக்கு சொந்தமானது எனவும் 1-ம் பிரதிவாதியின் தாயாரின் பாட்டி தாவா சொத்துக்களை 1-ம் பிரதிவாதியின் தாயார் அடையும் வன்னம் முழு உரிமை கொடுத்து உயிலாவணம் ஏற்படுத்தினார் எனவும் அதனடிப்படையில் வருவாய் கணக்குகளில் பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வந்தார்கள் எனவும் சொன்னால் தவறு. வழக்கு விபரங்கள் மற்றும் ஆவணங்கள் குறித்த விபரங்கள் என் தகப்பனாரை விசாரணை செய்தால் தெரியும் என்றால் சரி. வா.சா.ஆ.2, வா.சா.ஆ.6 தாவா சொத்துக்களை அபகரிப்பதற்காக என் தகப்பனாரால் உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தவறு. மேற்படி விபரங்கள் அனைத்தும் என் தகப்பனாருக்கு தெரியும் என்பதால்தான் உண்மை விபரங்களை மறைத்து நான் Major ஆன பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்க கூடியதல்ல என்றால் தவறு. என் தகப்பனாரின் தூண்டுதலின்

பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.07.23 15:21:05 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.